முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிமன்றம், திருப்பூர்
O.S. No.45/2021

<u>வா.சா.3 / P.சரவணக்குமார் / 09.01.2024</u>

<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1. **தற்போது என்னிடம் காணப்பிக்கக்கூடிய மனோகரனின் டிடிஎஸ் செலுத்தியதற்கான படிவம் 16A படிவத்தில் வா.சா.ஆ.16 கிரைய ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள 1 சதவீதம் டிடிஎஸ் தொகை குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த டிடிஎஸ் படிவம் 16A தான் பி.வா.சா.ஆ.3, பி.வா.சா.ஆ.4, பி.வா.சா.ஆ.5.** (மேற்கண்ட ஆவணம் பிரதிவாதி மூலம் மட்டுமே குறியீடு செய்யவேண்டும் என்றும் சாட்சிக்கு இதுகுறித்து எதுவும் தெரியாது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்.)

2. அன்று நான் தாக்கல் செய்த மூ.சா.ஆ.6, மூ.சா.ஆ.7, மூ.சா.ஆ.8 டிடிஎஸ் விவரங்கள் மனோகரன் டிடிஎஸ் செலுத்திய தொகை விவரங்கள் பி.வி.ரவி, கார்த்திக், அனுஷா ஆகியோரது படிவம் 26AS ல் வரவு வைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கக்கூடிய ஆவணம் வாரியார்கிளாத்திங் கம்பெனி 2018 – 2019 க்கான Balance Sheet ற்கான Annexure. அதில் ஆடிட்டர் கையெழுத்திட்டுள்ளார் என்றால் சரிதான்.அ ந்த ஆண்டிற்கான Fixed Assert 14,65,06,723/- என குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணம் பி.வா.சா.ஆ.6. (மேற்கண்ட ஆவணம் பிரதிவாதி மூலம் மட்டுமே குறியீடு செய்யவேண்டும் என்றும் சாட்சிக்கு இதுகுறித்து எதுவும் தெரியாது என்றும் வாதி தரப்பு வழக்கறிஞர் ஆட்சேபனை தெரிவித்தார்.) நான் ஏற்கனவே தாக்கல் செய்த மூ.சா.ஆ.3 2018 –2019 ஆவணத்தில் Fixed Asserts தொகையுடன் மேற்கண்ட தொகை ஒத்துப்போகிறது என்றால் சரிதான்.

3. பி.வா.சா.ஆ.6 fixed assert ல் கரைப்புதூர் லேண்ட் என ரூ.4,62,94,706/- என குறிப்பிடப்பட்டுள்ளது. ஒரு Assessee ஒரு அசையா சொத்து வாங்கும் போது fixed assert என்ற காலத்தில் தான் அந்த அசையா சொத்தின் விவரம் குறிப்பிடுவார் என்றால் சரிதான். Balance Sheet மற்றும் fixed assert விவரம் நாங்கள் கேட்கும்போது ஆடிட்டர் மூலம் கொடுக்க வேண்டும். 1 கோடிக்கு மேல் ஆண்டிற்கான வர்த்தகம் நடைபெறும் போது கண்டிப்பாக அவர்கள் பேலன்ஸ் சீட் தாக்கல் செய்யவேண்டும். இந்த வழக்கை பொறுத்த வரை அவ்வாறு மனோகரன் தாக்கல் செய்துள்ளார். அசையா சொத்தின் மதிப்பு 50 லட்சத்திற்கு மேல் விவசாயம் நிலம் அல்லாத சொத்தாக இருக்கும் பட்சத்தில்

அதன் டிடிஎஸ் கிரைய மதிப்பில் 1 சதவீதம். நான் தற்போது சரிபார்த்த ஆவணப்படி கிரைய மதிப்பில் 1 சதவீதம் செலுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. 28.12.2017 கிரைய பத்திரம் ஆன விவரம் 2018–2019 வருமான வரிக்கணக்கில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரவி மட்டுமே எங்கள் சர்க்கிளில் வருமான வரி செலுத்திகிறார். மற்ற இருவர் அனுஷா மற்றும் கார்த்திக் எங்கள் சர்க்கிளில் வருமானவரிக்கணக்கு செலுத்தவில்லை. 2018–2019 ல் மனோகரனுக்கு இந்த வழக்கு சொத்தை விற்றது குறித்து ரவி Capital Gain காண்பித்துள்ளாரா என்று ஆவணங்களை பார்த்தால் தான் சொல்ல முடியும்.

**அனுமதியுடன் மறுவிசாரணை**

1. Annexure Balance Sheet physical filing கிடையாது. ஆன்லைனில் தாக்கல் செய்வார்கள். தேவைப்படும் போது கேட்போம். Scrutiny க்காக தேவைப்படும் போது கேட்போம். ஆன்லைனில் தாக்கல் செய்யும் போது அதற்கான Acknowledgement வரும். Scrutiny க்காக கேட்கும்போது Acknowledgement தரமாட்டோம். என்னென்ன ஆவணங்கள் சமரர்ப்பிக்கப்படுகிறது என்பதை சுட்டிக்காட்டி அதற்கான Acknowledgement வழங்கப்படும். பி.வா.சா.ஆ.6 ல் அவ்வாறு ஒப்புகை இல்லை என்றால் சரிதான்.

சாட்சியின் வாக்குமூலம் என் வாய்மொழிப்படி தட்டச்சரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்ட பின்னர் அவரது கையெழுத்து பெறப்பட்டது.

SWARNAM J NATARAJAN

Digitally signed by SWARNAM J NATARAJAN
Date: 2024.01.09 19:24:11 +0530

முதன்மை மாவட்ட மற்றும் அமர்வு நீதிபதி,
திருப்பூர்.